பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
22 06 2024 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

2. உதகமண்டலத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. இந்தியாவில் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த செய்தி நிறுவனமாக ஆகாஷவாணி செய்தி நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிகெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் தென்னாப்பிரிக்கா 7 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

மத்தியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதிய அரசு அமைந்த பின்னர் வெளிநாட்டு தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணமாக வருவது இதுவே முதல்முறையாகும்.

முன்னதாக இம்மாத துவக்கத்தில் புதுதில்லியில் நடைபெற்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சரவைப் பதவியேற்பு விழாவில் திருமதி ஷேக் ஹசீனா கலந்துகொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் புதுதில்லி வந்துள்ள திருமதி ஷேக் ஹசீனாவை நேற்று மாலை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பங்களாதேஷ் பிரதமரின் வருகை இந்தியா – பங்களாதேஷ் இடையே நிலவும் நெருக்கமான உறவைக் குறிப்பதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு உள்ள சிறப்பு மிக்க உறவை மேலும் மேம்படுத்த திருமதி ஷேக் ஹசீனாவின் வழிகாட்டுதலை தாம் பாராட்டுவதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் தில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இந்தியா, பங்களாதேஷுடன் கொண்டுள்ள ஆழமான உறவை மேலும் மேம்படுத்த உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

பங்களாதேஷ் பிரதமரின் இந்த சுற்றுப்பயணத்தின்போது இரு நாடுகளுக்கிடையே பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

உதகமண்டலத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோத்தகிரியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் தாம் போட்டியிட்ட நீலகிரி தொகுதியில் வெற்றி பெறாவிட்டாலும், தேர்தலின்போது தொகுதி மக்களுக்கு தாம் அளித்த வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

நீலகிரி தொகுதியில் வெற்றி பெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா மீது 2-ஜி அலைக்கற்றை வழக்கு விசாரணையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் யோகாவை கட்டாயப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கள்ளக்குறிச்சியில் விஷச் சாராயம் அருந்தி 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், இச்சம்பவம் குறித்து சட்டசபையில் எதிர்க்கட்சிகள் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்படாதது கண்டிக்கத்தக்கது என்றும் அமைச்சர் திரு. முருகன் கூறினார்.

<<<<>>>>

சென்னை மாநகரில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒரு லட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் 200 பெண்களுக்கு இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் வழங்கப்படும் என்று சமூகநலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று தமது துறை மீது நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் இந்த அறிவிப்பை வெளியிட்ட அவர், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்களில் இருந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் தனியாக பாதுகாப்புடன் பயணம் செய்ய ஏதுவாக தனி வண்ணம் கொண்ட ஆட்டோக்களில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு காவல்துறை மூலம் கண்காணிக்கப்படும் என்று கூறினார்.

இதற்காக வாகனம் ஓட்டுவதில் உரிமம் பெற்ற ஆர்வம் உள்ள 200 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு ஆட்டோவின் மொத்த விலையில் ஒரு லட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக இவர்களுக்கு கடனுதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வீட்டில் இருந்து தொலைதூரத்தில் பணிபுரியும் மகளிருக்கு உதவும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் விடுதிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

திருப்பூர், கோவை, திருவள்ளூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் மறுசீரமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளவர்களுக்கு விரிவான மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் செய்யப்பட்டுள்ள சுகாதார சேவைகள் குறித்த விரிவான ஆவணத்தை மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று புதுதில்லியில் வெளியிட்டது.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுகாதாரத்துறை செயலாளர் திருமதி அபூர்வசந்திரா, ஹஜ் புனிதப் பயணம் சென்றுள்ள இந்தியர்களுக்கு சவுதி அரேபியாவில் விரிவான சுகாதார வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகக் கூறினார்.

முன்னதாக தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர், சவுதி அரேபியாவில் இந்த ஆண்டு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட இந்தியர்களில் 98 பேர் உயிரிழந்துவிட்டதாகக் கூறினார்.

இந்திய யாத்ரீகர்களுக்கு ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரகம் தேவையான உதவிகளை செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

மக்களவை இடைக்கால தலைவர் தேர்வு விவகாரத்தை காங்கிரஸ் கட்சி அரசியலாக்குவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சி தேவையில்லாமல் இப்பிரச்சினையை பெரிதாக்குவதாகக் கூறினார்.

இடைக்கால தலைவர் என்பது தற்காலிக ஏற்பாடே என்றும், புதிய சபாநாயகர் தேர்வு செய்யப்படும் வரை அவரது செயல்பாடுகளும் ஒரு வரம்புக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த திரு. **Bhartruhari Mahtab** மக்களவைக்கு தொடர்ச்சியாக 7 முறை தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ஜெய்ராம் ரமேஷ், திரு. **Bhartruhari Mahtab** மக்களவை இடைக்கால தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

மக்களவையில் மிக மூத்த உறுப்பினர்கள் திரு. கொடிக்குன்னில் சுரேஷ் மற்றும் திரு. வீரேந்திர குமார் என்றும், இதில் திரு. வீரேந்திர குமார் பிஜேபி சார்பில் மத்திய அமைச்சராக பொறுப்பேற்றுள்ள நிலையில் திரு. கொடிக்குன்னில் சுரேஷை இடைக்கால தலைவராக நியமித்திருக்கலாம் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையிலும், கள்ளக்குறிச்சி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று அவர் சந்தித்துப் பேசினார்.

அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மது அருந்தி நீண்ட நேரம் ஆனவர்கள் தங்களது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயலிழந்து வருகிறது என்று தெரிவதற்கு முன்னாள் கூட, மருத்துவமனைக்கு வர தயக்கம் காட்டியதால் உயிரிழப்புகள் அதிகமானதாக கூறினார்.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 16 பேரில் 8 பேர் நலமுடன் இருப்பதாகவும், 8 பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

சேலத்தில் 31 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவில் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த செய்தி நிறுவனமாக ஆகாஷவாணி செய்தி நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் செயல்படும் ராய்டர்ஸ் ஊடக பயிற்சி மையம் நடத்திய கருத்துக்கணிப்பில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

டிஜிட்டல் செய்தி-2024 என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு முடிவுகளை ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

அதில் இந்தியாவில் மிகவும் பிரபலமான செய்தி நிறுவனமாக ஆகாஷவாணி திகழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள பிரசார் பாரதி தலைவர் திரு. நவ்னீத்குமார் ஷேகல் எந்தச் சூழ்நிலையிலும் உண்மையை உரைக்க வேண்டும் என்ற ஆகாஷவாணி செய்தி நிறுவனத்தின் கடமை உணர்வுக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் இது என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மும்பையில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் **The Golden Thread** என்ற இந்திய ஆவணப் படம் சர்வதேச பிரிவில் சிறந்த ஆவணப் படமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான விருதை இயக்குநர் நிஷிதா ஜெயினுக்கு திரைக்கலைஞர் பூனம் தில்லான் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மும்பை திரைப்பட விழா இயக்குநர் திரு. **Prithul Kumar**, கடந்த காலங்களை விட இந்த ஆண்டு, இந்தத் திரைப்பட விழாவில் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்றதாக கூறினார்.

'அமிர்த காலத்தில் இந்தியா' என்ற சிறப்பு பிரிவில் **Life in Loom** என்ற திரைப்படத்திற்காக இயக்குநர் எட்மண்ட் ரான்சனுக்கு சிறந்த குறும்படத்திற்கான விருது வழங்கப்பட்டது.

**And Towards Happy Alleys** என்ற திரைப்படத்தை இயக்கிய **Sreemoyi Singh** சிறந்த அறிமுக இயக்குநருக்கான தாதாசாகேப் பால்கே சித்ர நாகரி விருதை பெற்றார்.

<<<<>>>>

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-8 சுற்றில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

நார்த்சவுண்டில் நடைபெற உள்ள இந்தப்போட்டி, இந்திய நேரப்படி இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று இங்கிலாந்து அணிக்கு எதிரான சூப்பர்-8 சுற்றுப் போட்டியில் தென்னாப்பிரிக்கா 7 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் விளையாடிய தென்னாப்பிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 163 ரன் எடுத்தது.

164 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி, 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 156 ரன் எடுத்தது.

**<<<<The End>>>>**